

▶ **திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியில் கூகுள் நிறுவனம் சார்பில் கூகுள் ஆப்ஸ் என்ற 2 நாள் கருத் தரங்கு நடந்தது. கூகுள் நிறுவன மேலாளர் அரிச்சந் திரன் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார். அருகில் கல்லூரி முதல்வர் விஜயராகவன், துறை தலைவர்கள் குமரன், கேசவன்.**

# ஜெயா கல்லூரியில் கருத்தரங்கு

**திருவள்ளூர், செப். 30:** திருநின்றவூர் ஜெயா பொறி யியல் கல்லூரியில் கூகுள் நிறுவனம் சார்பில், கூகுள் ஆப்ஸ் என்ற தலைப்பில் 2 நாள் செயல்முறை கருத்த ரங்கு நடந்தது. ஜெயா கல்வி குழுமங்களின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். செயலாளர் விஜயகுமாரி, துணை தலைவர் நவராஜ் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் விஜயராகவன் வரவேற்றார். கருத்தரங்கில் கூகுள் நிறுவன மேலாளர் அரிச்சந்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சியளித்தார். கணினி அறிவியல் துறை தலைவர் குமரன், எம்சிஏ துறை தலைவர் கேசவன் மற்றும் பேரா சிரியர்கள், விரிவுரையாளர்கள், 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். செந்தில் நன்றி கூறினார்.